REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: ஐப்பசி 22உ செவ்வாய் (8—11—55) ★ ★ வெளியூர்: ஐப்பசி 23உ புதன் (9—11—55) [இதழ் 125

மின்சார நிலையங்கள் ஆந்திராவில் தேசிய மயமாகின்றன!

கர்னூல், நவ. 7—

மாநிலம் முழுவதிலுமிருக்கும் தனிப்பட்டவர்களிடத்தில் உள்ள மின்சார விநியோக நிலையங்களை, வரும் 1956 மார்ச் திங்கள் இறுதிக்குள் சர்க்கார் வயப்படுத்திக் கொள்ளுவதென ஆந்திர சர்க்கார் முடிவு செய்திருப்பதாகத் தெரியவருகிறது.

இப்போது மாநிலத்தில் 11 மின்சார நிலையங்கள் இருக்கின்றன. அவற்றில் இரண்டிற்கு, சர்க்கார் அவற்றை மேற்கொள்ளப் போவதாக ஏற்கனவே 'நோட்டீஸ்' பிறப்பித்துள்ளது.

(4-ம் பக்கம் பார்க்க)

'வடவரை தென்னவர் பூஜிக்கின்றனர்!'

'ஆனால் தென்னவரை வடவர் அவமதிக்கின்றனர்'

முன்னாள் தலைமை நீதிபதி பதஞ்சலி சாஸ்திரி குமுறல்

சென்னை, நவ. 6—

"தென்னாட்டவர் குறுகிய மனப்பான்மை கொண்டவர்கள்; 'மாகாணப் பித்து'க் கொண்டவர்கள்—என்று குற்றம் சுமத்தப்படுகிறது. அந்தக் குற்றச்சாட்டைப் பொய்ப்பிப்பதாக உள்ளது இந்த ரானடே புத்தகசாலை. வேறொரு மாகாணத்தைச் சேர்ந்த ஜஸ்டிஸ் மகாதேவ கோவிந்த ரானடேயின் பெயரால் அவரது நாட்டுப் பற்றையும், சேவையையும் மனதில் கொண்டு 50 ஆண்டுகளுக்குமுன் நிறுவப்பட்ட இந்தப் புத்தகசாலை, தென்னாட்டவரின் பெரு நோக்குக்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.

"ஆனால், அதே நேரத்தில், நான் வட நாடு முழுவதும் சுற்றிப் பார்த்திருக்கிறேன். அங்கு எந்த ஒரு நகரிலேனும் 'ராஜாஜி மண்டபம்' என்றோ, 'சீனிவாச சாஸ்திரி கல்லூரி' என்றோ, 'கிருஷ்ணசுவாமி அய்யர் அரசியல் கழகம்' என்றோ இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

"தென்னாட்டவர்தான், இந்தியாவின் இதர பகுதி (வட நாடு)யைச் சேர்ந்த பெரிய மனிதர்களின் நினைவுக்குச் சின்னம் எழுப்பியிருக்கின்றனர்.

"கோகலே பெயரில் ஒரு மண்டபம், விவேகானந்தா பெயரில் கல்லூரி, சுபாஷ் போஸ் பெயரில் ஒரு சாலை, இராமகிருஷ்ணர் பெயரில் பல கல்விக்கூடங்கள், இன்னும் பலர் பெயரில் பல நிறுவனங்கள்—தென்னாட்டில் நிறுவியிருக்கிறோம்; ஆனால் வட நாட்டில்?

"தங்கள் பெயரில் இந்தியாவின் இதர பகுதிகளில் நிறுவனங்கள் இல்லை என்று கவலைப்படுபவர்களல்ல—ராஜாஜி, கிருஷ்ணசாமி அய்யர், சீனிவாச சாஸ்திரி போன்றவர்கள்; ஆனால், 'தென்னாட்டவர் குறுகிய நோக்குடையோர்' என்று குற்றஞ்சாட்டப்படும் போது, இந்த நிலையை எடுத்துக்காட்ட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது,"

—என்று இந்தியத் தலைமை நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதியான எம். பதஞ்சலி சாஸ்திரி, மைலாப்பூர் ரானடே புத்தகசாலை, தென்னிந்திய தேசீய சங்கம் ஆகியவற்றின் பொன் விழாக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கிப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

'வடக்கு வடக்குதான்-தெற்கு தெற்குதான்'

'இரண்டும் என்றும் வேறு வேறுதான்'

'மெயில்' இதழ் கண்டுபிடிப்பு

சென்னை 7—11—55 'மெயில்' இதழில் காணப்படுவது:—

"...சிற்பங்களும் சித்திரங்களும் அறிவுப் பொக்கிஷங்களாகும்.

"அந்தச் சிற்ப சித்திரக் கலைப் பாரம்பரியத்தையும், பண்பாட்டையும் கொண்டவர்கள்தான் தென்னாட்டில் வாழ்கின்றனர். எவர்தான் அந்தத் தென்னாட்டு மக்களை குறுகிய மனம்படைத்தவர்கள் — மாகாணப்பித்துக் கொண்டவர்கள் என்று துணிந்து கூறிவிட முடியும்?

"தென்னாட்டவர் மீது சுமத்தப்படுகிற இந்தக் குற்றச்சாட்டை மறுத்து, பதஞ்சலி சாஸ்திரி குரல் கொடுத்திருக்கிறார்.

"மராட்டியத்தைச் சேர்ந்த தேசபக்தரான ரானடேயின் பெயரில் மைலாப்பூரில் ஒரு மண்டபம் இருக்கிறது; ஏன்—மாராட்டியத்தைச் சேர்ந்த மற்றொரு விடுதலை வீரரான கோகலேயின் பெயரில் ஒரு மண்டபம் இருக்கிறது.

"இப்படி தென்னாட்டின் நகரங்களிலும், பேரூர்களிலும் வடநாட்டுத் தலைவர்களின் பெயரால் எண்ணற்ற நிறுவனங்களும், சாலைகளும் இருக்கின்றன.

"நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் பெயரில் சென்னை நகரில் ஒரு சாலை இல்லையா? காந்திஜி, நேரு, சர்தார் படேல் ஆகியோரின் பெயரில் எண்ணற்ற சங்கங்கள், படிப்பகங்கள் இருக்கின்றன. 'சிவாஜி வியாயம் மண்டல்' என்ற நிறுவனம் கொண்டிருப்பதில் சென்னை நகரம் பெருமைப்படவில்லையா?

• • •

"பம்பாய், கல்கத்தா, டில்லி போன்ற வடநாட்டில் உள்ள எந்த நகரத்திலேனும் தென்னாட்டுத் தலைவர்கள் பெயரால் ஏதேனும் நிறுவனங்கள், கழகங்கள் உண்டா?

"காந்தியாரின் பெரும் மதிப்பிற்குரியவராயிருந்த சேலம் சி. விஜயராகவாச்சாரி நம்மிடையே இருந்தார்.

"தனிச் சிறப்போடு காங்கிரஸ் தலைவர் பதவி வகித்த எஸ். சீனிவாச அய்யங்கார் இருந்தார்.

"சர். ஆர். கே. ஷண்முகம் செட்டியாரின் தீர்ப்புகளும், சத்தியமூர்த்தியின் தீப்பொறி பறக்கும் பேச்சுக்களும் — பதில்களும், இன்னும் டில்லி மத்திய சட்டசபைக் கட்டிடத்தில் எதிரொலித்துக் கொண்டிருக்கவில்லையா?

"சொல் வல்லுனராக விளங்கிய சீனிவாச சாஸ்திரி இருக்கவில்லையா?

"வடநாட்டவர் தென்னாட்டில் கௌரவிக்கப்பட்டிருப்பதைப் போன்று, இந்தத் தென்னாட்டவரில் எவரேனும் வடநாட்டில் கௌரவிக்கப்பட்டிருக்கின்றனரா?

• • •

"சாஸ்திரி செய்த சேவைகளின் நினைவாக, இன்று தென்னாப்பிரிக்காவில், 'சாஸ்திரி கல்லூரி' என்று ஒன்றிருக்கிறது; ஆனால், வடநாட்டில் எங்கும் இல்லை

"அகில இந்தியத் தலைவராக இருப்பவர் என்பதன்னியில் மேற்கு வங்க கவர்னராகவும், இந்தியாவின் கடைசி முதல் இந்திய கவர்னர்-ஜெனரலாக இருந்தவர் ராஜாஜி; வடநாட்டில் அவரைப் பெருமை படுத்துவதற்காக, ஒரு மண்டபம், ஒரு சங்கம் உண்டா?

"பார்க்வெட்டில் மண்டபம் என்று இருந்ததை, 'ராஜாஜி மண்டபம்' என்று சென்னைதான் மாற்றவேண்டிவந்தது.

"நீண்ட காட்களாக, தென்னாட்டை ஆதிக்கம் கொண்டிருந்தது, வட நாட்டவரின் வால்மீகி கலாச்சாரமாகும்; இன்னும் கூட இங்கு (தென்னாட்டில்) நாம் வால்மீகி கழகங்களைக் கொண்டிருக்கிறோம்.

"கம்பன், வள்ளுவர் போன்ற தமிழ் புலவர்களுக்கு சமீப காலமாகத்தான் நாம் முக்கியத்துவம் கொடுத்துவருகிறோம். குறள் தந்த வள்ளுவரின் பிறந்த நாளைக் கொண்டாடுவதையோ, கம்பர் மாநாடு நடத்துவதையோ பத்து ஆண்டுகளுக்கு முன் நாம் கேள்விப்பட்டதுண்டா?

"என்றாலும், 'தென்னாட்டவர் பிரிவினை மனப்பான்மைகொண்டவர்; குறுகிய நோக்கம் கொண்டவர்' என்று குற்றஞ்சாட்டப்படுகின்றனர்.

"டில்லி, கல்கத்தா, பம்பாய் போன்ற நகரங்களில் குடியேறியுள்ள தென்னிந்தியர்கள் முயற்சிக்கு நாம் நன்றி செலுத்த வேண்டும். தென்னாட்டுக் கலாச்சாரம் மெள்ள மெள்ள உணரப்படுகிறது. தென்னாட்டு பெரிய மனிதர்களின் நினைவாக விழாக்கள் நடத்தப்படுகின்றன.

"ஆனால், வடக்கு வடக்குத்தான் — தெற்கு தெற்குத்தான்; வடக்கும்—தெற்கும் எப்பொழுதும் வேறு வேறுதான்!"

—என். ஜே. ஆர்.

பாக். இந்திய மந்திரிகள் கோரிக்கை

கராச்சி, நவ. 7—

பாகிஸ்தான் புதிய அரசியல் திட்டத்தில், கூட்டுத் தொகுதி முறையை சேர்க்காவிட்டால், மத்திய, மாகாண சர்க்கார்களிலுள்ள இந்து மந்திரிகள் விலகிக்கொள்வதாகக் கூறியுள்ளனரென்று செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

கண்ணதாசன் இலங்கைப் பயணம்

★

'தென்றல்' ஆசிரியர் தோழர் கண்ணதாசன், 7—11—55 காலை 11 மணிக்கு, சென்னை-மீனம்பாக்கம் விமான நிலையத்திலிருந்து இலங்கை புறப்பட்டார். ஏராளமான கழகத் தோழர்களும், படிப்பகம், மன்றத் தோழர்களும் விமான நிலையத்திற்கு வந்து தோழர் கண்ணதாசனை அனுப்பிவைத்தனர்.

திருவாளர்கள் ஏ. எல். எஸ் சீனிவாசன், டைரக்டர் சாட்சி, இராமனுதன், இராம-சுப்பையா, எஸ். எஸ். தென்னரசு, ஜி நாகராசன், பி. பி. பத்மநாபன், தமிழ்ப் பித்தன், எஸ். ஏ. ஜி. சாமி, சாமுவேல், க. நாராயணன், மு. மாசிலாமணி, தாமரைச்செல்வன் அழகரசன் ஆகியோரும் மற்றும் பலரும் விமான நிலையத்திற்கு வந்திருந்தனர்.

சென்னை சூளை சவுந்திரபாண்டியன் நினைவுப் படிப்பகம், பேராசிரியர் சுந்தரனார் நாடகக் கலைக் கழகம் ஆகியவற்றின் சார்பாக தோழர் கண்ணதாசனுக்கு மாலைகள் சூட்டப்பட்டன.

பேராசிரியர் இருதயராஜ் மறைந்தார்

திருச்சி, நவ. 6—

திருச்சி புனித சூசையப்பர் கல்லூரிப் பேராசிரியரும், 'திராவிட நாடு' இதழில் தொடர்ந்து கட்டுரை எழுதி வருபவரும், அண்ணாவின் நெருங்கிய நண்பரும், நமது இயக்க அனுதாபியுமான பேராசிரியர் ஏ. இருதயராஜ் எம்.ஏ., அவர்கள் நேற்று (5—11—55) மாலை 7-30 மணிக்கு இயற்கையெய்தினார்.

5—11—55 மாலை, கல்லூரியிலிருந்து வீடு திரும்பியதும் தோழர் என். சாம்பு அவர்களின் இல்லத்திற்கு வந்து திருச்சி நகரசபை விஷயமாகப் பேசிக்கொண்டிருக்கும்போதே திடீரென்று மயக்கமுற்றுக் கீழே சாய்ந்தார்; உடன் உயிர் பிரிந்தது.

6—11—55 ஞாயிறு மாலை 5 மணிக்கு எடத்தெருவிலுள்ள அவர் வீட்டிலிருந்து, ஏராளமான இயக்கத் தோழர்களும், நகரசபை உறுப்பினர்களும், கல்லூரி ஆசிரியர்களும், மாணவ-மாணவிகளும் அடங்கிய சவ ஊர்வலம் நடைபெற்று, இரவு 7 மணிக்கு சவ அடக்கம் செய்யப்பட்டது. திருவாளர்கள் இராட், நசுருதீன், எம். எஸ். மணி, எஸ். பிரான்சிஸ், ரம்போலா மாஸ்கரனுஸ் ஆகியோர் இறுதி வணக்கம் தெரிவித்து, அவர் செய்த சேவைகளைப் பற்றிப் பேசினார்கள்.

தோழர் இருதயராஜ் அவர்களுக்கு வயது 38 ஆகிறது. அவர் 15 ஆண்டுகளாகக் கல்லூரிப் பேராசிரியராகவும், 7 ஆண்டுகளாக நகராண்மைக் கழக உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார். அவருக்கு ஒரு இளம் மனைவியும், இரண்டு ஆண் குழந்தைகளும், ஒரு பெண் குழந்தையும் இருக்கின்றனர்.

பேராசிரியராக இருந்துகொண்டே பொதுநலப் பணியில் அரும்பாடுபட்டு உழைத்த பேராசிரியர் அவர்களது மறைவு குறித்து, அவரை இழந்து தவிக்கும் உற்றார், உறவினர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம். (ஆ-ர்)

கனி மொழியால் கவர நினைக்கிறாரா?

நேட்டு அலுத்துப் போன பேச்சுத்தானே?

"மொழி, சந்தேகமில்லாமல் முக்கியமான ஒன்றுதான்; ஆனால், மொழி நம்மைப் பிரித்துவைக்கும் போக்கினைப் பெறும்போது, தேசிய ஒற்றுமையைச் சீர்குலைக்கும்போது, ஆபத்தான ஒன்றாக ஆகிவிடுகிறது.

"குழப்பமூட்டுகிற பிரிவினைப் போக்குகளை, நாம் நமது முழு பலத்துடன் எதிர்நோக்கியாக வேண்டும் என்னுடைய எஞ்சிய வாழ்நாளில், இந்தியா, சமூக—பொருளாதாரத் துறைகளில் வளர வேண்டும் என்று விரும்புகிறேன். சிறிய அற்ப விஷயங்களில் காலத்தை வீணாக்குவதால் பயன் இல்லை.

"இந்தி மொழியைப் பிறர் மீது திணிப்பது தவறு. எல்லா 18 வட்டார மொழிகளும் தேசிய மொழிகள் என்றே நான் கூறி வந்திருக்கிறேன்; என்றாலும், இந்தி, இந்தியப் பேரரசின் அலுவல் மொழியாக இருக்கும்; ஆனால், அதனால், இதர மொழிகள் இந்தியைவிட எந்த வகையிலும் தாழ்ந்தவை அல்ல

"நமது சிக்கல்களை நாம் அமைதியான விவாதங்களினால் தீர்த்துக்கொள்ள வேண்டும். அதிக உணர்ச்சி வயப்படுவதும் கிளர்ச்சி செய்வதும் கூடாது," என்று, டில்லியில் நடைபெறும் வட்டார காங்கிரஸ் தலைவர்கள் கூட்டத்தில் பண்டித நேரு குறிப்பிட்டிருக்கிறார்.

நம் நாடு

தி.மு.க.தினஇதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்

சென்னை 8—11—'55 செவ்வாய்

அடிப்படைக் கல்வி

'குழந்தைகளுக்கு போதிக்கப்படும் அடிப்படைக் கல்வி எதிர்காலத்தில் உருவாக்க விரும்பும் ஒரு சமுதாயம் எத்தன்மைத்தாய் இருக்க விழைகிறேமோ அத்தன்மையை மனதில் கொண்டு, நீண்ட காலப் பெருநோக்குடன் அத்தகு சமுதாயத்தை உருவாக்குவதற்கு உதவக்கூடியதாக இருக்க வேண்டும்,' என்று பொதுவாக ஒப்புக்கொள்ளப்படும் கருத்தை, கடந்த கிழமையில் டாக்டர் அழகப்பா ஆரம்பக் கல்வி ஆய்வுக் குழுவின் அறிக்கை குறித்து எழுதியபோது தெரிவித்திருந்தோம்.

அந்த நோக்கிலிருந்து கண்ணுறும்போது, அழகப்பா குழுவினர், ஆதாரக் கல்விக்கு ஆதரவளித்துச் செய்துள்ள சிபாரிசு ஏற்றுக்கொள்ளத் தக்கதாயில்லை.

ஆதாரக் கல்வி, காந்தியாரின் ஆசியைப் பெற்றது என்ற ஒரே காரணத்தினுல்தான், இன்றைய ஆட்சியாளர்கள் அதன் மீது 'மோகம்' கொண்டவர்களாகக் காட்சி தருகின்றனரே தவிர, உண்மையில், ஆட்சியாளர்கள்கூட அந்தக் கல்வித் திட்டத்தை முழு மனதுடன் விரும்டிகின்றனர் என்று கூற முடியாது.

"நவீன காலத்தில் உலகம் பெற்றுள்ள அத்தனை வசதிகளையும் பெறுவதற்கு வேறெந்த வெளிநாட்டையும் இந்தியா எதிர்பார்க்கக் கூடாது. இந்தியா அணுசக்தி சாதனம் முதல் குண்டுசி வரை இந்தியாவிலேயே உற்பத்தி செய்து கொள்ளும் நிலையை அடைந்தால்தான், சுய தேவைப் பூர்த்தியுடையவர்களாக நாம் இருக்கிறேம் என்று கூற முடியும்; எனவே, எல்லாவகையான கனரகத் தொழில்களும் இந்தியாவில் நிறுவப்பட வேண்டுவது அவசியம்; அதற்காகவே இந்த ஐந்தாண்டுத் திட்டம்," என்று, இந்தியப் பேரரசின் மூலவர்களான பிரதமர் நேரு போன்ருர் கூறிவருகின்றனர்.

இந்த மூலவர்கள் உருவாக்க எண்ணுகிற எதிர்காலத்திற்கு, ஆதாரக் கல்வி உதவக்கூடியது அல்ல என்பது மட்டுமின்றி, நேர்முரணனதும்கூட என்பதை அவர்கள் அறியாதவர்களல்லர். ஆனுல், ஆதாரக் கல்விக்கு ஆசி வழங்கியவர், 'தேசத்தின் பிதா,' என்று தாங்கள் வர்ணித்த காந்தியார் என்பதினுல்தான், அந்த திட்டத்தின் மீது தங்களுக்குப் பற்றும், நம்பிக்கையும் இருப்பதாகக் கூறுகின்றனரே தவிர, வேறல்ல.

'பொறியியல் துறையும் அறிவுத் தேர்ச்சியும், நிபுணத்துவமும் பெற்றவர்கள் பெருவாரியாகத் தேவை' என்று கூறுகிற அதே ஆட்சியாளர்கள், எப்படி அந்தத் தேவையை ஆதாரக் கல்வி மூலம் பூர்த்தி செய்துகொள்ளப் போகிறர்கள் என்பது நமக்குப் புரியவில்லை.

ஆதாரக் கல்வி என்ற பெயரில், தரப்படுகிற நூல் நூற்கவும், கைராட்டை சுற்றவும், பாய் முடையவும், கூடை பின்னவும், பானை வனையவும் போன்ற குடிசைத் தொழில் அறிவு நீண்டகால கடினமான பயிற்சிக்குப் பிறகு பெற வேண்டிய ஒன்றல்ல; எளிதில் குறுகிய காலத்தில், அவசியமும் ஆர்வமும் இருப்பின் எந்தப் பருவத்திலும் பெற்றுக் கொள்ளக்கூடியதுதான்.

இந்த அறிவை இளம் சிறுர்கள் பெறுவதினுல், எதிர்காலத்தில் அவர்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய, உலகத்தின் இதர பகுதி மக்களுக்குக் கிடைக்கிற உயரிய நல்வாழ்வு கிடைக்க உதவக்கூடியதல்ல.

இத்தகு உதவாக்கரைத் திட்டத்திற்கு, டாக்டர் அழகப்பா குழுவினர் ஆதரவு தந்திருக்கத் தேவை இல்லை. ஆய்வுக் குழுவினர், அடிப்படைக் கல்வி போதிக்கும் ஆசிரியர்களின் நியாயமான கோரிக்கைகளைக் கூர்ந்து பரிசீலித்து, அவர்களுக்குத் தரப்பட வேண்டிய நியாயமான ஊதியம், வசதி, வாழ்க்கை வசதிகள் குறித்து திட்டவட்டமான சிபாரிசு செய்யாதது ஒரு பெருங் குறையென்றே சொல்லவேண்டும்.

கல்வி போதிப்பவரது வாழ்க்கைச் சூழ்நிலைகள் நிச்சயமாக, அவர் தனது பணியினைத் திறம்பட ஆற்ற உவக்கூடியதாயிருக்கவேண்டும்.

மற்றும், 300-ம், அதற்கு மேலும் மக்கள் கொண்ட ஒவ்வொரு சிற்றூரிலும் பள்ளி வேண்டும்—முதல் மூன்று வகுப்புகளுக்கு இயன்றவரை பெண்களையே ஆசிரியர்களாக நியமிக்க வேண்டும்—எந்தத் துவக்கப் பள்ளியிலும் கட்டணம் வசூலிக்கக் கூடாது—பள்ளியின் நடைமுறை நாட்கள் 220 என்றிருப்பதைக் குறைக்கத் தேவை இல்லை—ஒரு நாளைக்கு ஐந்து மணி நேரம் பள்ளி நடைபெறலாம் என்பன, குழுவினர் செய்துள்ள சிபாரிசுகளுள் வரவேற்கப்பட வேண்டியவையில் மற்றும் சிலவாகும்.

'பேசுகிறேம்-செயலில் ஈடுபடுவதில்லை'

பண்டிதரின் ஒப்புதல்

புதுடில்லி, நவ 7—

'ஒவ்வொரு விஷயத்திற்கும் ஒரு மாநாடு இருக்க வேண்டும்; இந்தியாவின் மூலைமுடுக்குகளில் உள்ள பல மக்களும் இதில் கலந்துகொண்டு, பல குறித்தும் விவாதிக்க வேண்டும்.

"மாநாடுகளில் சிறந்த வேலைகள் செய்யப்படுகின்றன. இதனுல்; மாநாடுகள் அவசியம் என்பதில் எனக்கு சிறிதும் சந்தேகம் இல்லை ஆனுல், கூடிப் பேசுவதிலேயே நாம் அதிக காலத்தைச் செலவு செய்துவிடுகிறேம்; செயலில் ஈடுபடுவதில்லை என்றே நான் கருதுகிறேன்,"

என்று, பண்டித நேரு, அகில இந்திய கூட்டுறவு வாரம் வெற்றி

நிறுவனங்களின் மூலதன வெளியீடு

புதுடில்லி, நவ. 3—

1955 ஜுனுடன் முடிவடைந்த நால் ஆண்டு காலத்தில் இந்திய சர்க்கார் 46 கம்பெனிகளுக்கு மொத்தம் சுமார் ரூ. 31,64,00,000 மூலதனம் வெளியிட அனுமதி வழங்கியுள்ளனர்.

இந்த விண்ணப்பங்களில் 29 விண்ணப்பங்கள் தொழில்துறை கம்பெனிகளிடமிருந்தும், 7 விண்ணப்பங்கள் விவசாயத் துறையில் ஈடுபட்டுள்ள கம்பெனிகளிடமிருந்தும், பாக்கி 10 விண்ணப்பங்கள் தொழில்துறை அல்லாத கம்பெனிகளிடமிருந்தும் வந்தவைகளாகும்.

இருபது விண்ணப்பங்கள், மொத்தம் ரூ. 9,64,78,750 மூலதனம் வெளியிடுவதற்காக புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கம்பெனிகளிடமிருந்து வந்தவையாகும்.

பண்டித பந்த் முகத்தில் நாகர்கள் கரி பூசினர்!

தனி நாடு இலட்சியத்தைக் கைவிட மறுத்தனர்

அச்சுறுத்தியும், ஆசை காட்டியும் பேரம் பேசியிருக்கிருர் உள்நாட்டு அமைச்சர்

இம்பால்—

தனிநாடு கோரி தீவிரமான கிளர்ச்சியில் ஈடுபட்டிருக்கும் நாகர்களிடத்தில், பண்டித பந்த் அச்சுறுத்தியும், ஆசை காட்டியும் கோரிக்கையைக் கைவிடுமாறு பேரம் பேசியிருக்கிருர்.

"இந்தியாவிலிருந்து நாகர்கள் பிரிந்து தனித்து வாழ முயற்சிப்பார்களேயானுல், அவர்கள் நிரந்தரமாக ஏழ்மையில் உழல வேண்டியிருக்கும்,"

என்று, பண்டித பந்த் அச்சுறுத்தினுராம்.

'மாருக, தனி நாடு கோரிக்கையைக் கைவிட்டு, இந்தியாவுடன் இணைந்திருக்க ஒப்பினுல் நாகர்களுக்கு சுகமான வாழ்வு தர ஏற்பாடு செய்யப்படும்,' என்றும் அவர் ஆசை காட்டினுராம்!

நாகர்களின் முன்னேற்றத்திற்காக, எவரும் கேட்காமலேயே சர்க்காராகவே முன்வந்து அதிகமான பணம் செலவிட்டு இந்திய சர்க்கார் பாடுபட்டு வருவதாயும், இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு நாக மக்கள் முன்னேற முற்பட வேண்டும் என்றும், இன்றேல், அவர்கள் முன்னேறவே வழி இல்லை என்றும் பேரம் பேசினுராம், பண்டித பந்த்!

நாகர்களின் தேசியக் கவுன்சில் சார்பில், 'நாகர்களின் சிக்கலுக்குப் பரிகாரம் காண பண்டித பந்த் முன்வரவேண்டும்; நாகர் தலைவர்களைச் சந்திக்க வேண்டும்'—என்று, இந்தப் பகுதிக்கு பந்த் வருவதற்கு முன் கேட்டுக் கொள்ளப்பட்டதாம்; ஆனுல், பந்த், நாகர் தேசியக் கவுன்சில் தலைவரான ஏ. ஜே. பிஜோவைச் சந்தித்துப் பேசுவதற்கு நிபந்தனையாக, 'பிஜோ, தனி நாடு கோரிக்கையைக் கைவிட வேண்டும்,' என்றும், 'இந்தியக் குடியரசு ஆட்சிக்கு விசுவாசம் தெரிவிக்க வேண்டும்' என்றும், 'அப்போதுதான் சந்திக்க முடியும்' என்றும் தெரிவிக்கப்பட்டதாம்.

ஆனுல், இந்த நிபந்தனையை நாகர் தேசியக் கவுன்சில் ஏற்றுக் கொள்ளாதது மட்டுமின்றி, நாகர் எவரும் பண்டித பந்திற்குத் தரப்படுகிற வரவேற்பில் கலந்து கொள்ளவும் கூடாது என்றும் தெரிவித்துவிட்டனர்.

அதன்படி. விரல்விட்டு எண்ணத் தக்க மிகச் சிலரே பண்டித பந்தைக் காணக்கூடியிருக்கின்றனர்.

பெருவாரியானவர்கள், விழாக்களுக்கும், கூட்டங்களுக்கும் வராது புறக்கணித்து, இந்தியப் பேரரசின் உள்நாட்டிலாகா மந்திரி முகத்தில் கரி பூசியிருக்கின்றனர்!

உழைத்து அலுத்த தொழிலாளருக்கு உல்லாசப் பிரயாணத் திட்டமாம்!

முக்கிய இடங்களுக்கு அழைத்துச் செல்வது பற்றி விவாதிக்கப்பட்டதாம்!

சென்னை, நவ. 7—

ஐதராபாத்தில் மூன்று நாட்கள் நடைபெற்ற தொழிலாளர் நல மந்திரிகள் மாநாட்டில், தொழிலாளருக்குக் கிடைக்கும் விடுமுறைகளைச் சிறந்த முறையில் பயன்படுத்துவதற்குரிய திட்டங்கள் பற்றி யோசிக்கப்பட்டதாம்.

நதி தீர பள்ளத்தாக்குத் திட்டங்கள், சமூக நலத் திட்டங்கள் நடைபெறும் இடங்கள் ஆகியன போன்ற முக்கியமான இடங்களுக்கு அவர்களை உல்லாசப் பிரயாணமாக அழைத்துச் செல்வது பற்றி விவாதிக்கப்பட்டதாம்.

வருடம் முழுமையும் உழைத்து, அலுத்துப் போயிருக்கும் தொழிலாளர்களுக்குத் தென்பூட்டுவதற்கும், அத்திட்டங்களை நேரில் கண்டு அறிவை அபிவிருத்தி செய்துகொள்வதற்கும் இந்த உல்லாசப் பிரயாணங்கள் பயன்தரக் கூடுமாம்.

மேற்கு நாடுகளில், இத்திட்டத்தை நடத்திப் பார்த்ததில் பெரும் அளவில் பலன் ஏற்பட்டுள்ளதாம்.

இவ்விபரங்களையெல்லாம் மத்திய துணைத் தொழிலாளர் மந்திரி அபித் அலி, இங்கு கூறியுள்ளார்.

காமராசரின் எண்ணம் தெளிவாகிறது!

சஞ்சீவி ரெட்டி தரும் தகவல்

சென்னை, நவ 5—

'சென்னை நகரம் தமிழ் மக்களுக்கே உரியது' என்று, ஆந்திர உதவி முதல் மந்திரி என். சஞ்சீவி ரெட்டி கருத்தறிவித்திருக்கிருர்.

சென்னை சட்டக் கல்லூரி ஆந்திர மணவர் சங்கக் கூட்டத்தில் பேசுகையில் மேலும் அவர், குறிப்பிட்டதாவது:—

"உலகெங்கும் அறிமுகமான 'சென்னை' என்ற பெயருக்குப் பதிலாக 'தமிழ்நாடு' என்று பெயர் மாற்றப்படுவது, அனேகருக்கு அந்த மாநிலம் எங்கே இருக்கிறது என்று தெரியாது போய் விடக் கூடும்; எனவே, மாநிலக் குழுவின் திட்டத்திற்குப் பிறகும் 'சென்னை மாநிலம்' என்ற பெயரே நீடிக்க வேண்டும்; முதன் மந்திரி காமராசர் கூட இதே கருத்தைத்தான் காண்டிருககிருர்."

நீதிபதிகளும், வழக்கறிஞர்களும் மதிக்கப்பட வேண்டும்

தலைமை நீதிபதி சக்லா கருத்து

'சமூக முன்னேற்றத்தில் நீதிபதிகளும், வழக்கறிஞர்களும் குறுக்கிடுவதாயும், பொதுவாக சர்க்கார் ஒரு க்ஷேமநல சமூகத்தை உருவாக்குவதற்கு அவர்கள் சட்டரீதியான குறுக்கீடுகளை உண்டாக்குவதாயும், உயர்தர அதிகாரத்திலிருக்கும் சிலர் கருதுகின்றனர்; அது தவறு.

'நீதிமன்றங்கள் இன்று உறுதியாகவும், சுதந்திரமாகவும் இந்தியாவில் இயங்குகின்றன; ஆனுல், இதனைக் குலைக்க சர்க்கார் தங்கள் அதிகாரத்தால் முற்பட்டால் அது இந்தியாவிற்கு தீங்கு பயப்பதாகும்.

"பல்வேறு சர்க்கார்கள், தனி 'டிரிபியூனல்'களை உண்டு பண்ணுவது, ஜனநாயகத்திற்குப் பெரும் கேடாகும்.

"ஒரு ஜனநாயக நாட்டில் நீதிபதிகளும், வழக்கறிஞர்களும் மதிக்கப்பட வேண்டியது மிக அவசியமானதாகும்,"

என்று, பம்பாய் உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி சி. ஜி. சக்லா தெரிவித்திருக்கிருர்.

பெறுமாறு அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தி ஒன்றில் குறிப்பிட்டிருக்கிருர்.

அதில் மேலும், 'நாம் இப்போது மாநாடுகள் காலத்தில் வசிக்கிறேம்,' என்றும் குறிப்பிட்டிருக்கிருராம்.

'தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம் கலைந்து விட்டது?'

'ஒற்றுமை இல்லாவிடில் இன்னும் 2,500 ஆண்டுகளுக்கு முன்னேற முடியாது'

மத்திய மந்திரி ஜெகஜீவன்ராம் கருத்து

ஐதராபாத், நவ. 6—

"தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம் எல்லா மாநிலங்களிலும் அநேகமாகக் கலைக்கப்பட்டுவிட்டது; முக்கியமான ஊழியர்கள் எல்லாம் சம்மேளனத்தை விட்டு வெளியேறி விட்டனர்.

"டாக்டர் அம்பேத்கார் மிகப் பெரிய மனிதர்தான் என்ருலும், நெருக்கடியான கட்டங்களிலும், பின்தள்ளப்பட்ட வகுப்பாரின் போராட்டங்களின்போதும் வழிகாட்ட இயலாதவராயிருக்கிருர்,"

என்று, மத்திய செய்திப் போக்குவரத்து மந்திரி ஜகஜீவன்ராம் குறிப்பிட்டிருக்கிருர்

ஐதராபாத் தாழ்த்தப்பட்ட வகுப்பு நிறுவனங்கள் பலவற்றின் கிளை தலைவர்கள், செயலாளர்கள் அடங்கிய கூட்டத்தில் பேசுகையில் அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"தங்களுடைய சொந்த நலனுக்காக, தாழ்த்தப்பட்டோர் நிறுவனங்களைப் பாழாக்கும்சிலரின் கருவிகளாக, சங்க ஊழியர்கள் மாறிவிடக் கூடாது. தாழ்த்தப்பட்ட மக்கள் ஒற்றுமையுடனிருந்து முன்னேறுவதற்கு வழிகாண வேண்டும். இதுதான் அதற்குத் தகுந்த சமயம். இப்போது, தங்களிடையேயுள்ள சிறு வேறுபாடுகளின் காரணமாக, இந்தச் சந்தர்ப்பத்தைத் தவறவிட்டுவிட்டால், இன்னும் 2,500 ஆண்டுகளுக்கு, அவர்கள் முன்னேற வழியே ஏற்பட இயலாது போய்விடும்."

செய்திச் சுருள்

★

தண்ணீர்ப்பள்ளி கழகப் - பள்ளி 25வது ஆண்டுவிழா

29—10—55ல், தண்ணீர்ப்பள்ளியிலுள்ள கழகப் பள்ளியின் 25-வது ஆண்டு வெள்ளி விழா நடைபெற்றது. விழாவில் தோழர் இளமுருகு—பொற்செல்வி கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்:—"தற்காலத்தில், 'ஏதாவது வருவாய் தராதா?' என்றஎண்ணத்துக்குரிய வாணிபப் பொருளாக்கப்பட்டுவிட்டது கல்வி; மனிதன் மனிதனாக வாழ்வதற்குக் கல்வி கட்டாயமானது. 'எண்ணும், எழுத்துமே வாழும் உயிர்களின் கண்கள்' என்கின்ற கருத்துக்கள் கைவிடப்பட்டு விட்டதால்தான் கண்ணிருந்தும் காணும் திறமையற்றவர்களாக மக்கள் வாழ்கிறார்கள்—வாழ்கிறோம். ஆகவே வெள்ளி விழாக்கள் கொண்டாடும் நேரத்தில் நாம் கல்வியிலும் கருத்துடையோராய் இருக்கவேண்டும். கல்வி— 'கல்வி'யாகவே திகழ்வதற்குத் தக்க புதிய ஏற்பாட்டை உருவாக்குவதில் அக்கறை எடுத்து வெற்றி பெற வேண்டும்."

மதுரைநகர் ஓட்டல் தொழிலாளர் கழகம்

2—11—55-ல், மதுரை நகர் ஓட்டல் தொழிலாளர் கழகச் செயற் குழுக் கூட்டம், கழக அலுவலகத்தில் தோழர் உதுப் தலைமையில் நடைபெற்றது. கழக ஆதரவு பெற்ற சுயேச்சை நகரசபை உறுப்பினர்களுக்குப் பாராட்டு நடத்துவது என்றும், கழகத்திற்கு இயக்க வார, மாதப் பத்திரிகைகள் வாங்குவது எனவும் முடிவு செய்யப்பட்டது.

டாக்டர் சி. நடேசன் மன்றம்

6—11—55 காலை 9 மணிக்கு, சென்னை சேப்பாக்கம் எண் 44 லால்பேகம் தெருவிலுள்ள மேற்படி மன்றப் புதுமனையை, தோழியர் அலமேலு-அப்பாதுரை திறந்து வைத்து, விழாவிற்குத் தலைமை தாங்கினர். தோழர்கள் கா. அப்பாதுரை, இளம்பரிதி, நீலநாராயணன், மா. மோகன், சி. எ. முகிலன், மா. வெ. இளங்கோ, எம். கே. மணி, மற்றும் பலர் டாக்டர் நடேசனாரின் சேவைகளையும், இலட்சியங்களையும் குறித்து சொற்பொழிவாற்றினர்.

திருப்பரங்குன்றம் திராவிடர் பகுத்தறிவு மன்றம்

4—11—55-ல், தோழர்கள் எஸ் மணிமொழியன் தலைமையில் நடைபெற்ற மேற்படி மன்ற உறுப்பினர் கூட்டத்தில், தோழர்கள் லெ. ஆனந்தன், சோ. ராமன், தே வை. முத்தையா ஆகியோரை முறையே செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளராகக் கொண்ட நிர்வாகக் குழுவும், மற்றும் செயற் குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன், மதுரை நகராண்மைக் கழகத் தேர்வில் வெற்றி பெற்ற தோழர் முத்து அவர்களைப் பாராட்டித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

'வீரபாண்டிய கட்டபொம்மன்' நினைவு நாள்

அந்தமான் தமிழர் சங்கத்தின் சார்பில், 16—10—55 காலை 9½ மணிக்கு, டிலானிப்பூர் தமிழர் சங்கக் கட்டிடத்தில், தோழர் வேதாசலம் தலைமையில் 'வீரபாண்டிய கட்டபொம்மன்' நினைவு நாள் கொண்டாடப்பட்டது. திரு. வி. சதாசிவம் அவர்களும் விழாவில் கலந்து கொண்டார். தோழர்கள் வீரராகவன், ராசாமணி, சு. ப. பொன்னுசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தோழர் பெருமான் கட்ட பொம்மனைப் பற்றி, கிராமீய நடையில் இசை விருந்தளித்தார்.

கழகச் செய்திகள்

★

அய்யம்பாளையம் தி. மு. கழகம்

3—11—55 இரவு 8 மணிக்கு தோழர் வை. செல்லப்பன் இல்லத்தில் நடைபெற்ற கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில், மாநில புனரமைப்புக் குழுவினரால் விடப்பட்ட 4 திரு-தமிழ்த் தாலுகாக்களையும் தாய்த் தமிழகத்துடன் இணைத்து 'தமிழகம்' அல்லது 'தமிழ் நாடு' என்று பெயரிடுமாறு சர்க்காரைக் கேட்டுக்கொண்டும், லோயர்பவானி ஆயக்கட்டுக்கு சம்பந்தப்பட்ட பூமிகளுக்கு சென்ற வருடத்திய மகசூலுக்குத் தண்டத் தீர்வையை ரத்து செய்திருப்பதாக கோவை மாவட்டக் கலெக்டர் உத்திரவு பிறப்பித்துள்ளதாகச் செய்திகள் வந்தும், நடைமுறையில் இன்னும் தண்டத் தீர்வை வசூலிக்கப்பட்டுவருவதை உடனடியாக கலெக்டர் கவனித்து தண்டத் தீர்வை வசூலிப்பதை நிறுத்தவேண்டுமென கேட்டுக் கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஆலந்தூர் தி. மு. கழகம்

29—10—55 இரவு 9-35 - மணிக்கு ஆலந்தூர் கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டம், கழக இல்லத்தில், தோழர் மு தங்கவேலு தலைமையில் நடைபெற்றது கூட்டத்தில், 1955-ம் ஆண்டு, ஆகஸ்டு, செப்டம்பர் ஆகிய 2 மாத வரவு — செலவு கணக்குகள் ஒப்புக்கொள்ளப்பட்டன. பின்னர், ஆலந்தூரில் முத்துக் குமாரசாமி நாயகர் சாலை போக்குவரத்து வசதிகளுக்கு மிகவும் சீர்கேடான நிலைமையில் இருப்பதால் ஆலந்தூர் பவர் ஸ்டேஷனிலிருந்து பரங்கிமலை இரயில் நிலையத்திற்குத் திரும்பும் சாலை வரையிலாவது சிமெண்ட் ரோடு போட செங்கற்பட்டு மாவட்டக் கழக அதிகாரிகளையும், ஆலந்தூர் ஊராண்மைக் கழக நிர்வாகிகளையும் கேட்டுக்கொண்டும், முத்துக் குமாரசாமி நாயகர் சாலையில் ஒரு பொது டெலிபோன் நிலையம் அமைத்துக் கொடுக்கும்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டும், ஆலந்தூரிலிருந்து சென்னை செல்ல பள்ளியில் படிக்கும் சிறுவர் சிறுமியர்களுக்கும் அலுவலகம் செல்லும் பொதுமக்களுக்கும் பஸ் வசதி போதுமானதாக இல்லாததால், இப்போது இருப்பதுடன் மேலும் அதிகமாக 4 பஸ்களை இந்தப் பாதையில் விடுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டும், ஆலந்தூரைச் சேர்ந்த மாதவபுரம் என்ற இடத்தில் குடியிருக்கும் மக்களுக்கு ரோடு, மின்சார விளக்கு, குப்பைத் தொட்டி முதலிய வசதிகளைச் செய்து தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கீழ்க்குளத்தில் தி. மு. க. அமைப்பு

30—10—55 மாலை 6 மணிக்கு நாஞ்சில் மாவட்ட தி மு கழகத் துணைச் செயலாளர் தோழர் பி. எம். கண்ணு தலைமையில், நாஞ்சில் மாவட்டத்திலுள்ள விளவங்கோடு தாலுகாவைச் சேர்ந்த கீழ்க்குளம் என்னும் ஊரில் தி.மு. கழக அமைப்புக் கூட்டம் நடைபெற்றது. பெருவாரியான உறுப்பினர்கள் கழகக் கட்டிடத்தில் குழுமியிருந்தனர். தோழர்கள் வை. சுப்பிரமணியம் ஏ இராமசாமி, கே. இராமசாமி, வி. எம். ஜான், ஆகியோர் அமைப்புக் கூட்டத்தில் கலந்துகொண்டு, திராவிட முன்னேற்றக் கழகம் அந்தப் பகுதியில் அமையவேண்டிய அவசியம் பற்றியும், கழக சட்டதிட்டங்கள் பற்றியும் விளக்கிப் பேசினர். பின்னர் தோழர்கள் சி எம். ஜான்சன், ஆர் செல்லம், ஆர். இரங்கசாமி ஆகியோரை முறையே செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளராகக் கொண்ட குழு

உங்களுக்குத் தெரியுமா?

★

நாசிக்கில் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள மத்திய சர்க்காருக்குச் சொந்தமான அச்சுக்கூடத்தில் சகலவிதமான அச்சு வேலைகளையும் செய்வதற்கான நவீன இயந்திர சாதனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த அச்சுக்கூடமும் முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள வேலைத் திட்டங்களில் ஒன்றாகும்; இதைத் தவிர, தென்னிந்தியாவில் ஒன்றும், பஞ்சாப் பரீதாபாத்தில் மற்றொன்றுமாக மேலும் இரண்டு அச்சுக்கூடங்கள் அமைக்கப்படவிருக்கின்றன.

இந்த அச்சுக்கூடம் பூனா-நாசிக் ரோட்டில்-நாசிக் ரோடு இரயில்வே நிலையத்திலிருந்து சுமார் 2½ மைல் தூரத்தில் 100 ஏக்கர் பரப்புள்ள ஒரு மனையில் அமைக்கப்பட்டிருக்கிறது. அச்சுக்கூடம் சகல வசதிகளும் கொண்ட மூன்று பகுதிகள் கொண்டதாக இருக்கும். தற்போதைக்கு முதல் இரண்டு பகுதிகளில்தான் வேலை ஆரம்பிக்கப்படும்; மூன்றாவது பகுதி 1956 மார்ச் மாதவாக்கில் வேலை துவங்கத் தயாராயிருக்கும். முதலாவது பகுதியில் பிரசுரங்கள், சஞ்சிகைகள், அறிக்கைகள் முதலியவையும், இரண்டாவது பகுதியில் பல வர்ணத் துண்டுப் பிரசுரங்களும், மூன்றாவது பகுதியில் நமூனைக்களும் அச்சிடப்படும்.

மேற்கு கடற்கரையில், விரிவானதொரு சர்வே நடத்தி, மத்திய மீன் துறை தொழில் நுட்ப நிலையமொன்றை அங்கே அமைப்பது, இந்தியாவின் மீன்துறை அபிவிருத்தித் திட்டத்தின் முக்கியமானதொரு அம்சமாகும். ஐ நா. உணவு-விவசாய நிறுவனத்தைச் சேர்ந்த மீன்துறை நிபுணர்கள் இந்த அபிவிருத்தித் திட்டவேலைகளில் உதவி புரிந்து வருகின்றனர். நடப்பு ஆண்டில் அத்தகைய நிபுணர்கள் எட்டு பேர் இந்தியாவுக்கு அனுப்பிவைக்கப்படுவார்கள்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் கிராமக் கைத்தொழில்கள் ஆகியவற்றுக்காக சுமார் ரூ. 260 கோடி செலவு பிடிக்கக் கூடிய அபிவிருத்தித் திட்டங்களை சிபாரிசு செய்துள்ள கார்வே குழு, தனது அலுவலை இந்த ஆண்டு ஜூன் திங்கள் துவக்கியது. அக்குழு சிபாரிசு செய்துள்ள திட்டங்களின்படி சுமார் 45 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்புக்கள் கிடைக்குமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

வறுமையையும், வரட்சியையும் போக்க வட நாட்டில் திட்டங்கள்

வரட்சிமிக்க பாலைவனப் பகுதிகளை வளமிக்க பூமியாக்க முயற்சி

இந்தியாவில் பசுமை நிறைந்த கங்கை சமவெளிப் பிரதேசம் முதல் இராஜஸ்தான் பாலைவனப் பிரதேசம் வரையில் எத்தனையோ வகை வகையான நிலப்பகுதிகள் இருக்கின்றன. தேசம் செழிப்புற்று, நாட்டு மக்கள் நலம் பெற வேண்டுமானால், ஒரு பகுதி மாத்திரம் சுபீட்சமாயிருந்தால் போதாது. 'அண்டைப் பிரதேசம் எப்படி இருந்தால் எனக்கென்ன?'—என்று யாரும் அலட்சியம் செய்வதற்கில்லை

இராஜஸ்தான் பிரதேசம் இப்போது பாசன வசதி அதிகமில்லாத வரட்சிப் பிரதேசமாக இருக்கிறது இந்நிலை மாறி, பக்ரா—நங்கல் கால்வாய்த் திட்டங்களினால் பாசன வசதி பெற்று, மின்சார உற்பத்தியும் விரிவடைந்தால், அங்குள்ள பாலைவனம் குறுகி சுபீட்சம் பெருகும்; இல்லையேல் காலப்போக்கில் அப்பாலைவனம் கங்கை சமவெளியிலும் பரவலாம்.

செழிப்பான பகுதிகளில் மக்கள் நெருக்கமாக வாழ்வார்கள் வரட்சியான பகுதிகளில் மக்கள் தொகை குறைவாகவே இருக்கும். சுமார் 1,30,207 சதுரமைல் பரப்பளவு உள்ள இராஜஸ்தானில் 1,52,90,797 பேர்தான் வசிக்கிறார்கள் — அதாவது, சதுரமைலுக்கு 117 பேர் இருக்கிறார்கள். ஆனால், கங்கை சமவெளியில் சதுரமைலுக்கு 882 பேர் வீதமும், சென்னைப் பிரதேசத்தில் சதுரமைலுக்கு 554 பேர் வீதமும் மக்கள் வாழ்கிறார்கள் வரட்சியால் விவசாயம் அதிகமில்லை; மக்களும் அதிகமில்லை.

தொழில்கள் பெருவாரியாகப் பெருகினாலாவது மக்கள் அதை நம்பி வாழலாம். நவீன தொழில்களுக்கு மின்சாரம் அவசியம் ஆனால் இராஜஸ்தானில் இன்னும் போதிய மின்சார வசதியில்லை. 1904-லேயே இராஜஸ்தானின் பகுதியான பிக்கானீர் நகருக்கு மின்சார வசதி கிடைத்துவிட்டது அதைத் தொடர்ந்து இதர சமஸ்தானங்களிலும் மின்சாரத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால், பொதுமக்களுக்கு அதிகமாக அதன் பலன் கிடைக்கவில்லை. அதுமட்டுமின்றி, மின்சாரப் பரவலும் அதிகமாய் நடைபெறவில்லை.

முதலாவது ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் இராஜஸ்தான் மின்சார உற்பத்தி வினியோக ஏற்பாடுகளைச் சீரமைப்பதற்காக திட்டக்குழு ரூ. 25 கோடி ஒதுக்கியிருக்கிறது.

இராஜஸ்தானில் மழை மிகச் சொற்பமாக இருப்பதால் 'பஞ்சம்' என்பது வழக்கமான விவகாரமாகிவிட்டது. மொத்த நிலப் பரப்பில் 42.5 சதவிகிதம்தான் சாகுபடி செய்யப்படுகிறது. 9 சதவிகித நிலத்துக்குத்தான் நீர்ப்பாசன வசதி இருக்கிறது. எப்போதும் விவசாயிகளுக்கு கஷ்ட நிவாரணம் அளிப்பது அவசியமாக இருக்கிறது. வரிகளை வஜா செய்யவும் தக்காவிக் கடன்களை ஏராளமாய் வழங்கவும் அவசியம் இருக்கிறது.

தண்ணீர் பஞ்சத்துக்கு ஒரு உதாரணம்—சில இடங்களில் தண்ணீரை டாங்கிகளில் நிரப்பி இரயில் மூலம் அனுப்பவேண்டியிருக்கிறது. வரட்சிமிக்க காலங்களில் நிலைமை இன்னும் மோசமாகிவிடும். ஏனென்றால், தண்ணீர் டாங்கிகள் போதிய அளவில் இல்லை, ஆதலால் தண்ணீர் விநியோகம் தடைப்பட்டுவிடும்.

மற்றொரு உதாரணம்—தண்ணீர் விநியோகத்திற்காக ஆண்டுதோறும் ரூ.8 இலட்சம் சர்க்காரால் செலவிடப்படுகிறது.

அபிவிருத்தித் திட்டங்கள்

இராஜஸ்தான் அபிவிருத்தியடைய வேண்டுமானால், தண்ணீர் வசதிக்கு வழி செய்ய வேண்டும். 1928-ல் கங்கா கால்வாய் திட்டம் மூலம், முன்பு கட்டாந்தரையாகக் கிடந்த 7,35,000 ஏக்கரா நிலம் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டு, அது இராஜஸ்தானின் களஞ்சியமாகிவிட்டது. தண்ணீர் வசதி கிடைத்தால் என்ன மாறுதல் ஏற்படும் என்பதை அது நிரூபிக்கும்.

பஞ்சாபிலிருந்து பக்ரா கால்வாயை இராஜஸ்தானுக்குத் திருப்பிவிட இப்போது திட்டமிடப்பட்டிருக்கிறது சுமார் 9,00,000 ஏகரா நிலம் அதனால் சாகுபடிக்கு வரும். இத்திட்டத்தின் மூலம் ஓரளவு கஷ்டம் குறையுமே தவிர பூரண பரிகாரம் ஏற்பட்டுவிடாது. எனவே, குழாய்க் கிணறுகள், 'இறவை'க் கிணறுகள் ஆகியவை ஏராளமான அளவில் ஏற்பட்டே ஆகவேண்டும். குழாய்க் கிணறுகளை அமைப்பதற்கான திட்டங்களும் பரிசீலிக்கப்பட்டிருக்கின்றன. 230 குழாய்க் கிணறுகளை அமைத்து வேலை செய்ய 2,000 கிலோவாட் மின்சார சக்தி தேவை பக்ரா-நங்கல் திட்டம் மூலம் இந்தப் பிரதேசத்துக்கு மின்சாரம் கிடைக்குமாதலால் அத்திட்டம் சிக்கனமாக நடைபெறும் என்று நம்பப்படுகிறது.

கனிவளச் சிறப்பு

இராஜஸ்தானில் கனிப்பொருள் வளம் ஏராளமாக இருக்கிறது. பழுப்பு நிலக்கரி (லிக்னைட்), செம்பு, சுண்ணாம்பு, கால்சைட், ப்ளோர்ஸ்பார், ஜிப்சம், செலினைட், உவர் மண் முதலியவைகளின் படிவுகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளை இலாபகரமாக வெட்டியெடுத்துப் பயன்படுத்துவதற்கும் மின்சார வசதி தேவை.

அதிக மின்சாரம் கிடைப்பதற்காக இராஜஸ்தான் சர்க்கார் பக்ரா-நங்கல் திட்டத்தில் பங்குதாரர்களாயிருக்கிறார்கள்; இராஜஸ்தானுக்கு அத்திட்டத்தின் மூலம் உற்பத்தியாகிற மின்சாரத்தில் 15.2 சதவிகிதம் கிடைக்கும்; கால்வாய் மூலம் தண்ணீரும் கிடைக்கும்.

மின்சாரம் போதிய அளவில் கிடைத்தால், வரட்சிமிக்க இராஜஸ்தான் சுபீட்ச இராஜஸ்தானாகிவிடும்; பஞ்சம் பறந்துவிடும்.

துணைப் பொதுச்செயலாளர் என்.வி. நடராசன்

நிகழ்ச்சிகள்

29—10—55 மாலை 6 மணிக்கு, பந்தநல்லூர் கடைவீதியில் கிளைக் கழகச் சார்பில், தோழர் என். அசோகன் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தோழர்கள் மா. கோ. மணி என். கிட்டப்பா ஆகியோர் பேசிய பிறகு, தி. மு கழகத் துணைப் பொதுச் செயலாளர் என். வி நடராசன் அவர்கள் தி. மு. கழகக் கொள்கைகள் பற்றியும், தற்கால அரசியல் நிலை பற்றியும் விரிவுரை ஆற்றினர்.

மாயவரம்

30—10—55 காலை 9-30 மணி அளவில் மாயவரம் புளியந்தெருவில் தோழர் மா. இ. இராமசாமி—தோழியர் சாவித்திரி திருமணம் தோழர் என். வி நடராசன் தலைமையில் நடைபெற்றது தோழர்கள் து. காசிநாதன், சி. ஐம்பு, கிருஷ்ணமூர்த்தி, கே. எஸ். சௌந்தரராசன், என். கிட்டப்பா ஆகியோர் மணமக்களை வாழ்த்தி உரை நிகழ்த்தினர். நகர தி. மு கழகம் மஜீத் மன்றம், நடராசன் படிப்பகம் ஆகியவற்றின் சார்பிலும். தனிப்பட்டோர்சார்பிலும்மணமக்களுக்கு வாழ்த்து மடல்களும் பரிசுகளும் வழங்கப்பட்டன.

மஜீத் மன்றத் துவக்க விழா

30—10—55 அன்று மாலை 6 மணிக்கு, மஜீத் மன்றக் கட்டிடத்தில், தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் தி. மு. கழகக் கொடியை ஏற்றிவைத்தார். கூறைநாடு கடை வீதியில் தோழர் சா. மீனாட்சி சுந்தரம் தலைமையில் நடைபெற்ற மன்றத் துவக்க விழாப் பொதுக் கூட்டத்தில், தோழர் என் கிட்டப்பா பேசினர். பின்னர், தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் நேருவின் தமிழ்நாட்டு சுற்றுப் பயணம் குறித்தும், தற்கால அரசியல் நிலை பற்றியும் பேசினர். இறுதியாக தி. மு கழகத் துணைப் பொதுச் செயலாளர் அவர்கள் மாநில மாநாடு பற்றியும், திராவிட நாடு பிரிவினை குறித்தும் சொற்பொழிவாற்றினார்.

31—10—55 காலை 9 மணி அளவில், மாயூரம் கிளை தென் பகுதி இரயில்வே மென் யூனியன் கிளையினர், தோழர் ஈ. வெ. கி சம்பத் அவர்களுடன் தொழிற் சங்கம் பற்றி விவாதித்தனர்.

வும், மாவட்டப் பிரதிநிதிகளாகத் தோழர்கள் ஏ எம். அப்துல்காதர், எச் தாசய்யனும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பண்டித பந்தின் பழைய பல்லவி!

'ஏக இந்தியா'வை நிலைநிறுத்த பெரு முயற்சி

தேவிகுளம், பீர்மேடு வேண்டுமென கக்கன் கோரிக்கை

வட்டார காங்கிரஸ் தலைவர்கள் கூட்டம்

கேரளத்தில் இணைக்கப்பட சிபாரிசு செய்யப்பட்டுள்ள தமிழ் தாலுகாக்களில் தேவிகுளம், பீர்மேடு இரண்டும் தமிழகத்தில் இணைக்கப்படவேண்டுமென தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் பி. கக்கனும், கேரளத்துடனேயே அவை மட்டுமின்றி, தமிழகத்துடன் இணைய வேண்டுமென சிபாரிசு செய்யப்பட்டுள்ள 5 தமிழ் தாலுகாக்களும்கூட கேரளத்திலேயே இருக்கவேண்டும் என்று திரு-கொச்சி பிரதேச காங்கிரஸ் தலைவர் உதயபானுவும், இங்கு நடைபெறும் வட்டார காங்கிரஸ் தலைவர்கள் கூட்டத்தில் தங்கள் வடநாட்டு எஜமானர்களிடத்தில் முறையிட்டிருக்கின்றனர்.

தேவிகுளம், பீர்மேடு சென்னையுடன் இணையவேண்டும் என்பதற்காக, தோழர் கக்கன் பல காரணங்களைக் காட்டினாராம்.

எல்லை நிர்ணயத்திற்கு மொழி மட்டும் அடிப்படையாக இருத்தலாகாது என்ற கொள்கையைதான் ஏற்றுக் கொள்வதாக அவர் கூறினாராம்.

என்றாலும் 'பெரியாறு, பாம்பாறு நீரை சரியாக உபயோகப்படுத்துவதற்கு தேவிகுளம், பீர்மேடு தாலுகாக்கள் இரண்டும் சென்னையுடன் இணைய வேண்டுவது அவசியம்; இவை இரண்டும் இணைவதைப் பொறுத்துத்தான் சென்னையின் பெரியாறு நீர்த்தேக்க மின்சாரத் திட்டம் வெற்றி பெறுவது இருக்கிறது. துங்கபத்திரா அணை திறம்பட வேலை செய்வதற்கு, பெல்லாரி திரும்பவும் ஆந்திராவுக்கு வரவேண்டும் என்று மாநிலக் குழுவினர் என்ன காரணத்திற்காகக் கருதுகின்றனரோ அதே காரணம் தேவிகுளம், பீர்மேடு சென்னையுடன் இணைய வேண்டும் என்பதற்கும் பொருந்தக்கூடியதாகும். பெரியாறு, பாம்பாறு நீர் அடுத்துள்ள மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களுக்கு பெரிதும் உதவக்கூடியதாகும்; ஆனால் இந்த ஆற்று நீரினால் கேரளத்திற்கு உபயோகம் எதுவுமில்லை; அவை கடலில் விழுந்து வீணாகின்றன. மேலும், தேவிகுளம், பீர்மேடு வட்டங்களில் மிகப் பெரும்பான்மையினர் தமிழர்கள். இங்கு வாழ்வோர் சென்னையுடன் இணைய வேண்டும் என்பதற்காக தீவிரமான இயக்கம் நடத்துகின்றனர்,' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

திரு-கொச்சி காங்கிரஸ் தலைவர் உதயபானு, ஒன்பது தாலுகாக்களும் கேரளத்துடனேயே இருக்க வேண்டும் என்று கோரியதுடன், அப்போதுதான், உத்தேச கேரள மாநிலத்தின் பொருளாதாரம் நிலைகுலையாதிருக்கும் என்றும், நிர்வாக வசதியும், பூகோளத் தொடர்பும் இருக்கிறது என்றும் கூறினாராம்.

பற்பல வட்டார காங்கிரஸ் தலைவர்களும் தங்கள் தங்கள் கோரிக்கைகளை வெளியிட்டிருக்கின்றனர்.

முன்னர் பேசிய காங்கிரஸ் தலைவர் தேபர், 'மாநில சீரமைப்பு காங்கிரஸ் இயக்கத்திற்கு ஒரு பெரும் நெருக்கடியான சோதனை' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

பண்டித பந்த் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"மாநில சீரமைப்பு என்பதுவே முடிவான ஒன்றல்ல: முக்கிய அடிப்படையான இலட்சியம் எல்லாம் இந்தியாவின் ஒற்றுமைதான். எதையும் நாம் சரியான கண்ணோட்டத்துடன் நோக்கவேண்டும் இந்தியாவின் ஒற்றுமைக்கும் முன்னேற்றத்திற்கும்தான் நாம் அதிகமான முக்கியத்துவம் தரவேண்டும். 'ஏக இந்தியா'தான் நம் கண்முன் வரவேண்டுமே தவிர, சிறு சிறு துண்டுப் பகுதிகளை நாம் மனதில் நினைத்துக் கொண்டிருக்கக் கூடாது!

"மொழி, வகுப்பு, மதம் இவை போன்ற குறுகிய மனப்பான்மைகள், இந்தியாவின் 'ஒற்றுமை'க்கும் 'ஐக்கிய'த்திற்கும் ஊறு பயப்பனவாகும்," என்று பழைய பல்லவியைத் திரும்பவும் பாடியிருக்கிறார்.

விமான எஞ்சின்கள் தயாரிக்க

இந்தியாவில் தொழிற்சாலை?

'ஜெட்' போர் விமானங்களும் உற்பத்தி செய்ய பேச்சுவார்த்தை

ரூ. 5 கோடியில் திட்டமாம்!

புதுடில்லி, நவ. 7—

பெங்களூர் இந்துஸ்தான் விமானத் தொழிற்சாலையில், 'ஜெட்' போர் விமானங்களைத் தயாரிப்பதற்கு, பிரிட்டிஷ் நிறுவனமொன்றுடன் இந்திய சர்க்கார் பேச்சுவார்த்தைகள் நடத்தி வருவதாகச் செய்தி ஒன்று கூறுகிறது.

அது மட்டுமின்றி, இந்தியாவில் விமான எஞ்சின்கள் தயாரிப்பதற்கு ஒரு தொழிற்சாலை அமைப்பதற்காக நடத்தப்படும் பேச்சுவார்த்தையில் முன்னேற்றமான நிலைமை ஏற்பட்டிருப்பதாகவும் தெரிய வருகிறது.

இந்த இரு திட்டங்களுக்கும் ரூ. 5 கோடி செலவாகுமென மதிப்பிடப்பட்டிருக்கிறதாம்.

மின்சார நிலையங்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எஞ்சிய ஒன்பது நிறுவனங்களுக்கும் இப்போது, சட்டப்படி நான்கு மாத 'நோட்டீஸ்' பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்று சர்க்கார் அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

கழகக் கூட்டம்

★

கோடம்பாக்கம்

பஸ் நிலையம் அருகாமையில்

9—11—55 மாலை 6 மணிக்கு

தலைவர்:

கோ. இறையரசு

பேசுவோர்:

இரா. நெடுஞ்செழியன்

முகவை-ஆர். எஸ். பாண்டியன்

சா. வில்லவன்

துணைப் பொதுச்செயலாளர்

என். வி. நடராசன்

9—11—55ல், கோழிஞ்சாம்பாறையில் நடைபெறும் சித்தூர் (தி-கோ.)—தமிழக இணைப்பு மாநாட்டில் கலந்து கொள்வார்.

அன்று கோழிஞ்சாம்பாறை சர்க்கார் கல்லூரித் தமிழ் மன்றத்தின் சார்பில் நடைபெறும் கூட்டத்திலும் கலந்து கொண்டு உரை நிகழ்த்துவார்.

திருக்குறள் வகுப்பு

9—11—55 மாலை 6 மணிக்கு சென்னை-புரசைபாக்கம், எண் 100, வேளாளத் தெரு தொண்டைமண்டல வேளாளர் சங்கத்தில், தோழர் க. அன்பழகன் அவர்கள் திருக்குறள் வகுப்பு நடத்துவார்

ஃ ஃ ஃ

9—11—55 மாலை 7 மணிக்கு சென்னை-இராயபுரம், எண் 59 மன்னார்சாமி கோவில் தெரு, வட சென்னை குறள் நெறிக் கழக அறையில், தோழர் சி. தியாகராசன் குறள் வகுப்பு நடத்துவார்.

சி. பி. சிற்றரசு

சுற்றுப்பயணம்

நவ. 9 ஆம்பூர்—நாடகத் தலைமை

13 தென்காசி

14 குறும்பலாப்பேரி (தென்காசி)

15 மதுரை—அமெரிக்கன் கல்லூரி

16 தேனி—காலை: திருமணம்

17 முக்கூடல்

18 திருநெல்வேலி

19 கண்டமனூர்

'தெலிங்கானா தனி மாநிலமாகவே இருக்க வேண்டும்'

முதன் மந்திரி மீது கல்லெறிந்த கூட்டத்தினர் கோரிக்கை

செகந்தராபாத், நவ. 5—

'விசால ஆந்திரம் கூடாது; தெலிங்கானா தனி மாநிலமாகவே இருக்கவேண்டும்,' என்று கோருபவர்கள், இன்று மிகக் கண்ணியக் குறைவான செயலில் ஈடுபட்டதாகத் தகவல் கிடைத்திருக்கிறது.

'ஆந்திரா பாங்கி' கிளை ஒன்றை திறப்பதற்காக ஐதராபாத் முதன் மந்திரி இராமகிருஷ்ணராவ் இங்கு வந்தார்

அவரை சுமார் 2000 பேர் சூழ்ந்துகொண்டு, 'ஏன் விசால ஆந்திரக் கோரிக்கையை ஆதரிக்கிறீர்கள்? தெலிங்கானா தனி மாநிலமாக இருக்கவேண்டும் என்று நாங்கள் கோரிவருகிறோம்,' என்று குரல் எழுப்பியதுடன், அவரது கார் நகரமுடியாதவாறு வழியை மறித்துக்கொண்டனராம். போலீசார் உதவியுடன் முதன் மந்திரி கூட்டத்தை விலக்கிக்கொண்டு சென்றபோது, கூட்டத்தினர், அவரது கார் மீது கல்லெறிந்து 'கலாட்டா' செய்திருக்கின்றனர்.

இத்தனைக்கும் இராமகிருஷ்ணராவ் அளவு கடந்த பொறுமையுடன் இருந்தாராம்.

பாங்கி கிளையைத் திறந்து வைத்துவிட்டுத் திரும்பியபோது அவரிடம் ஒருவர் கருப்புக்கொடியைத் தந்து, 'தெலிங்கானா தனி மாநிலமாக இருக்கவேண்டுவது எங்களின் ஏகோபித்த குரல்' என்று கூறினாராம். அதனைப் பெற்றுக்கொண்ட அனுமந்தையா, இது குறித்து மனு ஒன்று தருமாறும், அப்போது தேவையான நடவடிக்கைகளைத்தான் மேற்கொள்ள முடியும் என்றும் கூறினாராம்.

இராமகிருஷ்ண ராவ், போலீசார் மிகவும் பொறுமையுடன் நடந்துகொள்ள வேண்டும் என்றும் கூறிச் சென்றிருக்கிறார்.

தடியடிப் பிரயோகம் தவிர்க்க முடியாததாயிருப்பினும், போலீசார் அவ்வாறு செய்யாமல் கூட்டத்தைக் கலைக்க அமைதியான வழிகளையே கடைப்பிடித்தனராம்.

விடுதலைக் கிளர்ச்சிக்கு பிரான்ஸ் பணிவு

மொராக்கோ சுல்தானாக பென் யூசுப் அங்கீகாரம்

பாரிஸ், நவ. 7—

நாடு கடத்தப்பட்டிருந்த மொராக்கோ சுல்தானான சிதி முகம்மது பென் யூசுபை மீண்டும் மொராக்கோ மன்னராக பிரான்ஸ் அங்கீகரித்திருப்பதின் மூலம், மொராக்கோவில் நடைபெற்ற விடுதலைக் கிளர்ச்சிக்குப் பணிந்திருக்கிறது.

இரண்டாண்டுகள் மடகாஸ்கரில் நாடு கடத்தப்பட்டு வாழ்ந்து வந்த சுல்தான் சில நாட்களுக்கு முன்பு பாரிஸ் திரும்பினார்.

இவருக்குப் பதிலாக பிரெஞ்சுக்காரர்கள், பென் அராபா என்பாரை சுல்தானாக்கி வைத்திருந்தார்கள்.

பின்னர் அவர் சமீபத்தில் பதவியை விட்டு விலகிவிடவே, மூவரடங்கிய குழு ஒன்று சுல்தான் பொறுப்புகளைக் கவனிக்க நியமிக்கப்பட்டது.

பென் அராபா பதவியை இராஜினாமாச் செய்துவிட்டு, 'விடுதலையாகியுள்ள பென் யூசுபே சிம்மாதனத்திற்கு வாரிசு' என்று கூறிவிட்டுச் சென்றார்.

பாரிஸ் வந்த பென் யூசுப், மீண்டும் மொராக்கோவில் சுல்தானாவதைத் தவிர்க்க முடியாத பிரெஞ்சு ஆதிபத்தியக்காரர்கள், இப்போது அவர் சுல்தானாவதை அங்கீகரித்திருக்கிறார்கள்

நவம்பர் 16-ந் தேதியன்று, பென் யூசுப் மொராக்கோ சென்று பதவி ஏற்பார் என்று கூறப்படுகிறது.

இந்த அங்கீகாரத்தை அதிகார பூர்வமாக பிரெஞ்சு வெளிவிவகார மந்திரி அந்தோனி பினாய் அறிவித்தார்.

பென் யூசுப் தங்கியிருந்த இல்லத்திற்கு பினாய் வந்தபோது, அங்கு இராணுவத்தினர் கூடி, மொராக்கோ, பிரான்சு நாடுகளின் தேசியக் கீதத்தை இசைத்திருக்கின்றனர்.

இது குறித்து பின்னர் கருத்தறிவித்த சுல்தான் பென் யூசுப், 'நமது நாட்டின் வரலாற்றில் இது ஒரு முக்கியமான நாளாகும்; பிரான்சின் ஒத்துழைப்போடு நமது நாடு சுதந்திரத்துடன் முன்னேறும் என்று நாம் நம்புகிறோம்' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

பிரெஞ்சு வெளிவிவகார மந்திரி பினாயும், சுல்தானும் இது குறித்து கூட்டறிக்கை ஒன்று வெளியிட்டிருக்கின்றனர்.

"சுல்தான், மொராக்கோ தேசிய சர்க்கார் அமைக்கும் வேலையைத் துரிதமாக மேற்கொள்ளவேண்டும்; அந்த சர்க்கார் மொராக்கோவை ஒரு ஜனநாயக நாடாக—சட்ட ரீதியான மன்னர் கொண்ட அரசியல் அமைப்புடன் உருவாக்கவேண்டும்; அந்த சர்க்கார், பிரான்ஸ் சர்க்காருடன், மொராக்கோவை முழுச் சுதந்திரம் பெற்ற நாடாக்குவதற்காக பேச்சுவார்த்தை நடத்தவேண்டும்; சுதந்திரமாக மொராக்கோவும்—பிரான்சும் இணைந்து நின்று ஒருவருக்கு ஒருவர், வெளியார் தலையீடின்றி ஒத்துழைத்துக் கொள்ளவேண்டும்" என்று அறிக்கை கூறுகிறது.

★

அல்ஜீரியா பிரச்சினையில் ஏற்பட்ட அனுபவம் குறித்து பிரான்சுக்கு நடுக்கம்?

ஐ.நா.-வில் புதிய நாடுகள் உறுப்பினர்களாகச் சேருவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும்?

'ரத்து அதிகாரத்'தைப் பிரயோகிக்க முயற்சி

அல்ஜீரியா பிரச்சினையில் பிரான்சுக்கு ஐ. நா. அசெம்பிளியில் தோல்வி ஏற்பட்டதற்கு முக்கிய காரணம், ஆசிய—ஆப்பிரிக்க நாடுகளின் கூட்டு பலமே ஆகும். ஆகவே, அந்த கோஷ்டி நாடுகளுக்கு மேலும் பலம் சேருவதை பிரான்ஸ் விரும்பவில்லை.

பாதுகாப்பு சபையில் பெரிய வல்லரசுகள் ஏதேனும் ஒன்று தனது 'ரத்து அதிகார'த்தை உபயோகித்து, புதிய நாடுகள் ஐ நா-வில் உறுப்பினர்களாகாமல் தடுத்து விடலாம். இதுவரை ரஷ்யாவே இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி வந்திருக்கிறது.

சமீபத்தில், அல்ஜீரியா பிரச்சினை சம்பந்தமாக ஐ நா. அசெம்பிளியில் தோல்வி பெற்ற பிரான்ஸ், புதிய நாடுகள் ஐ. நா.-வில் உறுப்பினர்களாகச் சேருவதைத் தடுப்பதற்கு தனது 'ரத்து அதிகார'த்தை உபயோகிக்கப் போவதாகக் கூறப்படுகிறது.

புதிய நாடுகளை ஐ நா.-வில் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ள சம்மதித்தால் ஆசியா—ஆப்பிரிக்க கோஷ்டி மிகவும் பலப்பட்டுவிடும் என்றும், முக்கியமாக காலனி பிரச்சினைகளில் எதிர்ப்பு பலமாக இருக்கும் என்றும் பிரான்ஸ் அஞ்சுகிறது.

சில நாடுகளை ஐ நா-வில் உறுப்பினர்களாகச் சேர்ப்பது பற்றிச் சென்ற 8 ஆண்டுகாலமாக ரஷ்யாவுக்கும், அமெரிக்காவுக்குமிடையே கருத்து வேற்றுமை இருந்து வந்தது. இந்த முட்டுக்கட்டை தீர்ந்து, புதிய நாடுகளை உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொள்வது பற்றி ஐ நா.-வின் அடுத்த அசெம்பிளி கூட்டத்தில் உடன்பாடு ஏற்படக்கூடும் என்று கூறப்படுகிறது இவ்வாறு உடன்பாடு ஏற்படுவதற்கு கானடா அயல்நாட்டு மந்திரி எடுத்துவரும் முயற்சி வெற்றியடையும் என்று தெரிகிறது.

இந்தப் புதிய போக்கினால், பிரான்சுக்குக் கவலை ஏற்பட்டுள்ளது. 'ஐ நா. பாதுகாப்புக் குழுவில் நிரந்தர உறுப்பினர்' என்ற முறையில், பிரான்ஸ், தனது 'ரத்து அதிகாரத்'தை உபயோகித்து, புதிய உறுப்பினர்களை ஐ நா.-வில் சேர்த்துக்கொள்ளாமல் முட்டுக்கட்டை போடுமா என்று கவனிக்கப்படுகிறது.

ஒப்பந்தத்தை மீறிவிட்டதாம்!

கராச்சி, நவ. 7—

கடந்த மாதத்தில், பாகிஸ்தானும்—ஆப்கனிஸ்தானும் ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டனவாம்; அந்த ஒப்பந்தத்தில், பலாத்காரத்தைத் தூண்டி, துவேஷத்தை உண்டுபண்ணும் வகையில் எவ்விதப் பிரச்சாரத்திலும் ஈடுபடுவதில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ள விதிகளை மீறுவதாக ஆப்கனிஸ்தானுக்குக் கடுமையான ஆட்சேபனைக் குறிப்பொன்றை பாகிஸ்தான் அனுப்பியுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (21 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.